# நுண்கலை மன்ற அறிக்கை: 2019-2020.

2019-2020 ஆம் கல்வியாண்டில்
கணினி அறிவியல் துறையினரால் நுண்கலை மன்றச் செயல்பாடுகள் யாவும் செவ்வனே நடத்தப்பட்டன. தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் நாகை மாவட்டத்திற்கான கல்லூரி மாணவ மாணவியர் பங்கேற்கும் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நாகப்பட்டினம் இ.ஜி.எஸ் பிள்ளை பொறியியல் கல்லூரியில் 09-08-2019 அன்று நடைபெற்றது. போட்டிக்கான மாணவிகள் தேர்வு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப் பட்டனர்.

அண்ணல் மகாத்மா காந்தியின் 150 வது பிறந்த தினத்தை முன்னிட்டு, அகில இந்திய மகாத்மா காந்தி சமூக நலப் பேரவை நடத்திய "காலத்தின் தேவை காந்தியமே" என்ற தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் 15 மாணவியர் பங்கேற்றனர். 18-09-2019 அன்று இராதா அம்மையாரின் நினைவு நாள் விழாவை முன்னிட்டு அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) கும்பகோணத்தில் நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையிலான நுண்கலைப் போட்டிகளில் நமது கல்லூரியிலிருந்து 9 மாணவியர் கலந்து கொண்டனர். அதில் பரதநாட்டியப் போட்டியில் B. கனகதாரா, II B.Sc கணிதம், சுழற்சி I இரண்டாம் பரிசினையும், தனி நடனப் போட்டியில் L. கீர்த்தி, II B.A. ஆங்கில இலக்கியம் முதல் பரிசினையும் வென்று வந்தனர். 16.12.19 முதல் 19.12.19 வரை 4 தினங்கள் கல்லூரியில் பல்வேறு துறைகளுக்-கிடையிலான இசை, நடனம், மெஹந்தி, சிகை அலங்காரம், எம்பிராய்டரி, பூ கட்டுதல், வாழ்த்து அட்டை தயாரித்தல், ஓவியப் போட்டி, தமிழ் மற்றும் ஆங்கில நாடகப் போட்டிகள் நடத்தப் பட்டு பரிசுகள் மற்றும் சுழற் கேடயங்கள் வழங்கப் பட்டன. நாடக இசைக்கான சுழற் கேடயத்தை R. அபிதா,